# Articles about Mugavari

**En Vikatan(Anandha Vikatan)**

**An ‘address’ (*mugavari* in Tamil!) to education!**

Voice Snap’s website carried a comment by a visitor Mr. Madhi of Velachery, Chennai that “*Mugavari* Foundation has been sponsoring a number of economically poor students to continue their education”.

We went to *Mugavari* Foundation at Velachery. Its founder Ramesh said, “My native is a place called Attur, near Salem. Seeing a qualified, economically poor student struggling to join MBBS, despite getting admission, I decided to help her. That was the starting point of *Mugavari* Foundation. I located those students who were desperate to continue their education but, could not, for want of financial resources, and helped them. Cinema Director AR Murugadoss, a native of our adjacent village helped me in my efforts, first.

Now, there are 150 students who stay and continue their education in *Mugavari* Foundation. I don’t charge even a rupee from them. We provide shelter and support for the students from villages who come to Chennai. “Some students are preparing to crack civil services exams. So long human gratitude and philanthropy is alive, we have no worries” says Ramesh, proudly.

The *Mugavari* students shall contribute 7% of their earnings towards meeting newly adopted students’ education expenses.

This contribution apparently forms a link in the unending chain of love at *Mugavari*.

- S. Vadivarasu. Picture: K.K.Anand

Box item: On 16th February every year, *Mugavari* Day is celebrated. On that day, all *Mugavari* beneficiaries get together to share their happiness.

# கல்விக்கு முகவரி!




'முகவரி' மாணவர்கள்...

"'முகவரி பவுண்டேஷன்' என்ற அமைப்பைச் சேர்ந்தவங்க, படிக்க வசதி இல்லாத ஏழை மாணவர்களுக்கு நிறைய உதவிகளைச் செஞ்சிக்கிட்டு இருக்காங்க." இந்தத் தகவலை வாய்ஸ் ஸ்நாப்பில் தெரிவித்து இருந்தார் வேளச்சேரியைச் சேர்ந்த மதி என்ற வாசகர்.

வேளச்சேரியில் உள்ள 'முகவரி பவுண்டேஷ'னுக்குச் சென்றோம். அந்த அமைப்பின் நிறுவனர் ரமேஷ், "எனக்குச் சொந்த ஊரு சேலம் பக்கத்துல ஆத்தூர். எனக்குத் தெரிஞ்ச ஒரு பொண்ணுக்கு எம்.பி.பி.எஸ். சீட்டு கிடைச்சும் படிக்க வசதி இல்லாம ரொம்பக் கஷ்டடப்பட்டாங்க. அவங்களை எப்படியாவது படிக்க வைக்கணும்னு நெனச்சேன். அதுதான் இந்த 'முகவரி பவுண்டேஷன்' தொடங்கக் காரணமா இருந்துச்சு. படிக்கும் ஆர்வம் இருந்தும் படிக்க வசதி இல்லாமல் இருக்கிறவங்களைத் தேடிப் பிடிச்சு, உதவி செய்ய ஆரம்பிச்சேன். எங்க ஊருக்குப் பக்கத்து ஊர்க்காரரான இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ்தான் என் ஆர்வத்தைப் பார்த்து முதல்ல உதவி செஞ்சார்.

இப்போ எங்கள் 'முகவரி பவுண்டேஷன்'ல 150 பேரு தங்கிப் படிக்கிறாங்க. இதுக்காக நான் அவங்ககிட்ட எந்தக் கட்டணமும் வாங்குறது இல்லை. கிராமப்புறத்தில் இருந்து படிப்புக்காகச் சென்னைக்கு வர்ற மாணவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கும் அமைப்பாக எங்க அமைப்பு செயல்படுது.

'முகவரி'யில் இருக்கும் மாணவர்களில் சிலர் சிவில் சர்வீஸ் தேர்வுக்குத் தயாராகிக்கொண்டு இருக்கிறார்கள். நன்றி உணர்வும் மனிதநேயமும் இருக்கும் வரை எங்களுக்கு எந்தக் கவலையும் இல்லை" என்று பெருமிதத்தோடு பேசுகிறார்.

முகவரி அமைப்பில் படிக்கும் மாணவர்கள், எதிர்காலத்தில் வேலைக்குப் போன பிறகு வாங்கும் சம்பளத்தில் ஏழு சதவிகிதத்தை முகவரி அமைப்புக்குத் தர வேண்டும். அந்தப் பணத்தை அடுத்து வரும் மாணவர்களின் கல்விக்காகப் பயன்படுத்துவார்கள்.

*இது அன்புச் சங்கிலி!*

- ஆண்டுதோறும் பிப்ரவரி 16-ம் தேதி 'முகவரி டே' என்று கொண்டாடுகிறார்கள். அப்போது முகவரி பவுண்டேஷனில் படித்த மாணவர்கள் அனைவரும் ஒன்று கூடி சந்தோஷத்தைப் பகிர்ந்துகொள்கிறார்கள்.

**- சா.வடிவரசு**

படம்: **க.கோ.ஆனந்த்**